# 12

# நற்கருணை ஆண்டவர்



12.1 இறுதி இராவுணவு

நேரம் ஆனதும் இயேசு திருத்தூதரோடு பந்தியில் அமர்ந்தார். பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து ‘‘இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். எனது நினைவாக இவ்வாறு செய்யுங்கள்’’ என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து ‘‘இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகின்ற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை.’’ என்றார்.

(லூக்கா 22 : 14, 19 - 20)

இயேசு இறுதி இராவுணவின்போது நற்கருணையை ஏற்படுத்தினார். திருப்பலி நடைபெறும்போது இயேசுவின் இறுதி இராவுணவு நிகழ்வில் நாமும் பங்குபெறுகின்றோம். திருப்பலி கத்தோலிக்க திருவழிபாட்டின் மையமாக இருக்கின்றது. ஏனெனில் இறுதி இராவுணவின்போதும் திருப்பலியின்போதும் இயேசு நற்கருணையின் மூலம் அவரின் உடலினாலும் இரத்தத்தினாலும் நம்மை ஊட்டம் பெறச் செய்கின்றார். நற்கருணையில் அவர் உயிருடன் பிரசன்னமாக இருக்கின்றார். ஆதலால் நாம் அவரைப் பக்தியுடன் பெற வேண்டும். நற்கருணை பெறச் செல்லும்போதும் நற்கருணையைப் பெற்ற பின்னரும் கைகளைக் குவித்து வந்து முழந்தாளில் இருந்து சில நிமிடங்கள் பக்தியுடன் செபிக்க வேண்டும். நீர் முதன் முறையாக நற்கருணையைப் பெற்றுக் கொண்ட நாளை திரும்பவும் நினைவிற் கொள்ளவும். அன்று உம்மிடமிருந்த பக்தியும் மரியாதையும் இன்னும் இருக்கிறதா என சிந்தித்துப் பார்க்கவும்.



12.2 உயிருள்ள இயேசுவை எமது உள்ளத்தில் பெறுவோம்

## நற்கருணையின் சிறப்பியல்புகள்

1. அருளடையாளம்
2. உணவு
3. பலி
4. உடன்படிக்கை
5. நன்றி கூறுதல்
6. நினைவு கூறுதல்

## தேவ நற்கருணைக்கு முன்னடையாளங்கள்

### 1. மெல்கிசெதேக்கின் பலி

குருவும் அரசருமான மெல்கிசெதேக் முதன்முறையாக அப்பமும் திராட்சை இரசமும் கொண்டுவந்து கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தார்.

### 2. மன்னா

பாலைநிலத்தில் பசியால் வாடிய இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் மன்னா உணவைக் கொடுத்து அவர்களைப் போஷித்தார். (வி.ப 16 அதி)

### 3. இஸ்ரயேல் மக்களின் பாஸ்கா உணவு

இஸ்ரயேலர் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபெற்று உடன் படிக்கை நாட்டிற்கு பயணமான நிகழ்வை நினைவுக் கூர்ந்து வருடந்தோறும் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர். இஸ்ரயேல் மக்கள் இவ்வேளையில் பாஸ்கா உணவாகிய புனித அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகினர்.

**4. அப்பங்களைப் பெருகச் செய்தல்.**

ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல். புதிய ஏற்பாட்டில் நற்கருணைக்கு முன்னடையாளமாகும்.



12.3

திருத்தூதர்கள் திரும்பி வந்து தாங்கள் செய்த யாவற்றையும் இயேசு விடம் எடுத்துக் கூறினார்கள். அவர்களை மட்டும் கூட்டிக்கொண்டு அவர் தனித்திருப்பதற்காகப் பெத்சாய்தா என்னும் நகருக்குச் சென்றார். அதை அறிந்து திரளான மக்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அவர்களை அவர் வரவேற்று இறையாட்சியைப் பற்றி அவர்களோடு பேசி குணமாக வேண்டியவர்களை குணப்படுத்தினார். பொழுது சாயத் தொடங்கவே பன்னிருவரும் அவரிடம் வந்து ‘‘இவ்விடம் பாலை நிலமாயிற்றே சுற்றிலுமுள்ள ஊர்களுக்கும் பட்டிகளுக்கும் சென்று தங்கவும் உணவு வாங்கிக் கொள்ளவும் மக்கள் கூட்டத்தை அனுப்பி விடும்’’ என்றனர். இயேசு அவர்களிடம் ‘‘நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்’’ என்றார். அவர்கள் எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களுமே உள்ளன. நாங்கள் போய் இத்தனை பேருக்கும் உணவு வாங்கி வந்தால்தான் முடியும்.’’ என்றார்கள். ஏனெனில் ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்கள் அங்கு இருந்தனர். இயேசு அவருடைய சீடர்களை நோக்கி ‘‘இவர்களை ஐம்பது ஐம்பது பேராக பந்தியில் அமரச் செய்யுங்கள்’’ என்றார். அவர் சொன்னபடியே அனைவரையும் அவர்கள் பந்தியில் அமரச் செய்தார்கள்.

(லூக் 9 : 10 - 17)

பிறரின் பசியின்போது அவர்களுக்கு உணவளிக்க இயேசு உடனடியாக செயற்பட்டார். நாமும் பசியினால் வாடும் பிறருக்கு எம்மிடமுள்ளதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வருவோம். இதுவே இயேசு எமக்கு விடுக்கும் அழைப்பாகும்.

**செயற்பாடு**

1. தேவ நற்கருணையின் சிறப்பியல்புகள் மூன்றினை எழுதுக.
2. தேவ நற்கருணைக்கு முன்னடையாளங்கள் மூன்று எழுதுக.
3. அப்பங்களைப் பலுகச் செய்த அருங்குறியை உமது சொந்த நடையில் எழுதுக.
4. தேவ நற்கருணையின் மூலம் உயிருள்ள இயேசுவைப் பெற்றுக் கொண்ட நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் மூன்று எழுதுக.

**வாழ்க்கைக்கு**

நற்கருணையைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டு, உயிருள்ள ஆண்டவரிடம் செபிப்போம்.